# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 06 வியாழக்கிழமை 21.11.2024 கதிர் 424







# சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதை மக்கள் உணர வேண்டும் நாடாளுமன்றம் மீதான மக்களின் நம்பிக்கை காக்கப்படும்

## அரசின் கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றின் முதலாவது அமர்வில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முற்பகல் 11.30 அளவில் சபையில் முன்வைத்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இன்று உரையாற்றினார்.

தம்மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை வைத்துள்ள அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் தனியொரு கட்சி நாட்டை ஆள வேண்டும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது என்றும் எனவே, அனைத்து பிரஜைகளின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு தாம் கடமைப்பட்டிருப்பதாகவும், அதற்கு பொறுப்புக் கூறுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதுவரையில், நாடாளுமன்றில் நடந்த செயற்பாடுகள் பலவும் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், இனி நாடாளுமன்றின் கௌரவம் காக்கப்படுவதோடு, மக்களுக்கு அதன் மீதான நம்பிக்கையும் பேணப்படும், என அவர் உறுதியளித்தார். 5➤

## மன்றின் சபாநாயகராக அசோக ரங்வல தெரிவு பிரதி சபாநாயகரானார் மொஹமட் ரிஸ்வி சாலி



புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரங்வல தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பத்தாவது நாடாளுமன்றின் இன்றைய முதலாவது கூட்டத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, அசோக ரங்வலவின் பெயரைப் பரிந்துரைத்தார். அமைச்சர் விஜித ஹேரத் அதனை உறுதிப்படுத்தினார். 2➤

## தரமற்ற மருந்துக் கொள்வனவுக்கு அங்கீகாரம் பிரசன்ன, ரொஷான், ரமேஷ் சிஐடியில் ஆஜர்!



முன்னாள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரன, ரொஷான் ரணசிங்க, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் இன்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சென்றுள்ளனர்.

தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் தாக்கல் 2➤

## சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் வார நிகழ்வுகள் ஆரம்பம்!



மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்.தீவகம் - சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அனுஷ்ட்டிக்கப்படுவது வழமை,

அந்தவகையில் இந்த வருடமும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ள தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் 2➤

## அடுத்த நாடாளுமன்ற அமர்வு டிச. 3ம் திகதிக்கு ஒத்திவைப்பு

அரசாங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான விளக்கமான கொள்கைப் பிரகடனத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தை அடுத்த அமர்வுக்காக டிசம்பர் மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 வரை ஜனாதிபதி ஒத்திவைத்தார்.

## நாடாளுமன்றில் ரவி!



புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் நியமனமான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வில் இன்று கலந்து கொண்டார்.

நாடாளுமன்றத்திற்கு வருகை தந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த ரவி கருணாநாயக்க, தேசிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் ஊடாக மேற்கொள்ளப்பட்ட 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## மன்றின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி, சபாநாயகராக அசோக ரங்வல ஏகமனதாகப் பெயரிடப்பட்டார்.

இதேவேளை, பிரதி சபாநாயகர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் ரிஸ்வி சாலி நியமிக்கப்பட்டார்.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ அவரது பெயரை முன்மொழிய, அதை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் உறுதிப்படுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமலி வீரசேகர பிரதிக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார். அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அவரது பெயரை முன்மொழிந்தார்.

இதேவேளை, ஆளும் கட்சியின் தலைவராக அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவாக நலிந்த ஜயதிஸ்ஸவும் நியமிக்கப்பட்டனர்.

புதிய எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாசவை ஏற்றுக்கொண்டு அவரை சபாநாயகர் வரவேற்றார்.

## தரமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அங்கீகாரம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே இவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சபையில் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தின் அங்கீகாரம் தொடர்பில் அப்போது அமைச்சரவையைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 18 அமைச்சர்களிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த 11ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இருப்பதாகப் பொய்த் தகவலைக் கூறி, முன்னாள் சுகாதார அமைச்சர் 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் 182 வகையான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தபோது, அமைச்சரவையில் 18 பேர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

குறித்த அமைச்சரவைப் பத்திரத்தில் எவ்வாறான மருந்துகள் தேவை என்பது குறிப்பிடப்படாததன் பின்னணியில், உண்மையில் மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதா? அல்லது அமைச்சரவைப் பத்திரத்திற்கு விசாரணையின்றி எவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டது? என்பதற்கான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட வேண்டும், என அரசாங்கத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் காரணிகளை முன்வைத்துச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்படி, அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பான வாக்குமூலங்களை வழங்குவதற்காக, முன்னாள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரன, ரொஷான் ரணசிங்க, பிரசன்ன ரணதுங்க மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரை இன்று காலை 10 மணிக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட புலனாய்வுப் பிரிவு 1 இல் ஆஜராகுமாறு புலனாய்வு அதிகாரிகள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நாளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஆஜராகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது நியமனம் சட்டபூர்வமானது எனத் தெரிவித்தார். இந்த விடயம் ஒரு சிலருக்கு மாத்திரமே பிரச்சினை என்றும் முழுக் கட்சியினருக்கும் அது பிரச்சினை இல்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியை மீளக்கட்டியெழுப்புவதுடன், பலமான அரசியல் சக்தியாக அதனைச் சரியான பாதையில் வழிநடத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

## சாட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தயாராகி வருகின்றன.

நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதி மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவகம் - சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று உணர்வு பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு இதன்போது ஈகைச்சுடர் ஏற்றி, அகவணக்கம், மலர்வணக்கம் செலுத்தி உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது.

# 29 பிரதி அமைச்சர்கள் இன்று பதவிப்பிரமாணம்



புதிய அரசாங்கத்தின் 29 பிரதி அமைச்சர்கள் இன்று (21) ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்



மாவீரர் வாரத்தின் முதல் நாளான இன்று, விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# ஒத்திவைக்கப்பட்ட கிழக்கு மாகாண இலக்கிய விழா 28 இல் நடைபெறும்

(வி.ரி. சகாதேவராஜா)

தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கியவிழாவை எதிர்வரும் 28 ஆம் தேதி வியாழக்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்குரிய விருதுகளைப் பெறும் கலைஞர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவர்கள் அனைவருக்கும் அங்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவிருக்கின்றனர் .

திருகோணமலை இந்துக் கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர கலந்து சிறப்பிக்க உள்ளார்.

மேற்படி விழா தொடர்பாக முன்னைய திகதியும் இடமும் மட்டுமே மாற்றமடைந்துள்ளன, ஏனைய நிகழ்வுகள் யாவும் முன்னர் திட்டமிடப்பட்டது போன்று நடைபெறும் என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

சகல மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் அதற்காக நடவடிக்கைகளை எடுக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



# ஒருநாள் பந்து வீச்சாளர் தரவரிசை மகீஷ் தீக்சன ஆறாவது இடத்துக்கு!

சர்வதேச கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஒருநாள் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில், இலங்கை நட்சத்திரம் மகீஷ் தீக்சன ஆறாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த நியூஸிலாந்து அணியுடனான ஒருநாள் தொடரில் அவர் பெற்றுக்கொண்ட பெறுபேறே இந்த முன்னேற்றத்துக்குக் காரணமாகும்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில் முதலிரு போட்டிகளிலும் மகீஷ் தீக்சன மொத்தமாக 5 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார்.

இந்தத் தொடர் தொடங்குவதற்கு முன்னதாக தரவரிசையில் 12 ஆவது இடத்தில் அவர் இருந்திருந்தார்.

இதேவேளை, ஐசிசியின் ரி-20 பந்துவீச்சாளர் தரவரிசையில் அவர் ஐந்தாவது இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது



# மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் பலி : ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு , நவ. 21

முல்லைத்தீவு மாங்குளம்வெள்ளாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் இரண்டு நேருக்கு நேர் மோதியதில் இரு இளைஞர்கள் உயிரிழந்ததோடு ஒருவர் படுகாயமடைந்துள்ளார்

குறித்த சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் இருந்து மல்லாவி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும், மல்லாவியில் இருந்து மாங்குளம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளும் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மாங்குளம் வன்னிவிளாங்குளம் ஐந்தாவது மைல் கல் பகுதியில் மோதியதில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இந்த சம்பவத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்ததோடு ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவத்தில் மாங்குள பகுதியில் வசிக்கும் விஜயகுமார் விதுசன் (20 வயது), ஜெயகுமார் விதுசன் ( 23வயது ) ஆகிய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர். மரியதாஸ் சுவாமிகீர்த்தி (31 வயது) எனும் இளைஞர் படுகாயமடைந்துள்ளார். குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# நாடாளுமன்றில் 175 புதிய முகங்கள்

கொழும்பு, நவ. 21

இலங்கையின் பத்தாம் நாடாளுமன்றில் 175 புதிய முகங்கள் அமர்வுகளில் பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற பொது தேர்தலில் புதியதாக 175 பேர் தெளிவாகியுள்ளனர்.

இன்றைய தினம் பத்தாம் நாடாளுமன்றின் கன்னி அமர்வு நடைபெறுகிறது.

இவ்வாறு புதிதாக தெரிவானவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 25, 26 மற்றும் 27 திகதிகளில் விசேட செயலமர்வு ஒன்று நடைபெற உள்ளது.

நாடாளுமன்ற செயன்முறைகள், நிர்வாக நடவடிக்கைகள் போன்றவை குறித்து இந்த செயலர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான முக்கிய தகவல்கள் அனைத்தும் குறித்த தினத்தில் வழங்கப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷாணி ரோகினதீர தெரிவித்துள்ளார். (ஐ)

# அதிக வருமானத்தை பதிவு செய்துள்ள இலங்கை மின்சார சபை

கொழும்பு, நவ. 21

இலங்கை மின்சார சபை இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு பகுதியில் பாரிய வருமானத்தை ஈட்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் மின்சார கட்டணங்கள் குறைக்கப்பட்ட நிலையிலும் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான மூன்றாம் காலாண்டு பகுதியில் இலங்கை மின்சார சபை 126.8 பில்லியன் ஷரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது.

இது கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 19.8 வீத அதிகரிப்பாகும்.எவ்வாறெனினும் இந்த ஆண்டில் இரண்டு தடவைகள் மின்சார கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 21.9 வீதத்தினாலும் ஜூலை மாதம் 22.5 வீதத்தினாலும் மின்சார கட்டணங்கள் குறைக்கப்பட்டிருந்தன. இவ்வளவு பாரிய தொகை மின்சார கட்டணங்கள் குறைக்கப்பட்ட நிலையிலும் இலங்கை மின்சார சபை பெருந்தொகையில் வருமானத்தை ஈட்டி உள்ளது.



கடந்த 2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைவாக பெருந்தொகையில் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டு இருந்தது.

இந்த மின்சார கட்டண அதிகரிப்பு காரணமாக வறிய மக்கள் பெரும் பாதிப்புகளை சந்தித்ததுடன் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சிகளும் பெரும் பின்னடைவை எதிர்நோக்க நேரிட்டிருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இந்த ஆண்டில் இலங்கை மின்சார சபை வருமானத்தை ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# யார் இந்த அசோக ரன்வல?

10 ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக சபுமல் ரன்வல இன்றைய தினம் தெரிவுசெய்யப்பட்டார்.

அசோக சபுமல் ரன்வல பியகம யதிஹேன ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், கம்பஹா ஹேனேகம மத்திய கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியல் பிரிவில் பட்டம் பெற்ற அவர், ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக்கழகத்தில் உயிரியல் இரசாயன கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினராக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய அசோக ரன்வல, பியகம பிரதேச சபை மற்றும் மேல் மாகாண சபையின் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு மக்கள் பணியை ஆரம்பித்திருந்தார். அதுமட்டுமல்லாது, பெட்ரோலிய பொது ஊழியர் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றியிருந்தார்.

மேலும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து தீவிர அரசியலில் ஈடுபட்ட அவர், அக்கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு 1,09,332 விருப்பு வாக்குகளைப் பெற்று தேசிய மக்கள் சக்தியின் விருப்புப் பட்டியலில் ஆறாவது இடத்தை அவர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதநேயம்

**மனிதன் – இது வெறும் வார்த்தை அல்ல. இயற்கையின் உச்சகட்ட படைப்பு. பல கோடி ஆண்டு பரிணாம வளர்ச்சியின் விளைவால் இயற்கைக்குக் கிடைத்த மாபெரும் பரிசு மனிதன் ஆவான். வரம்பிலா வலிமை பெற்ற மனிதன் மனிதநேயம் எனும் மகுடத்தை சூடினால் மட்டுமே வைரமாய் மிளிர்கிறான்.**

**மனிதநேயம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது நம்மில் பலரும் இதுவரை நேரில் கூட கண்டிராத அன்னை தெரசாவும் நெல்சன் மண்டேலாவும் ஹெலன் கெல்லரும் போன்ற சான்றோர்கள் தான். மனிதநேயம் என்பது என்ன இவர்களின் கையடக்கப் பொருளா? பிறகு ஏன் இவர்கள் பளிச்சென்ற உதாரணமாகத் தோன்றவேண்டும். ஏனெனில் இவர்கள் "தனக்குப் போகத் தான் தானமும் தருமமும்" என்ற தகைமையைத் தாண்டி தன் வாழ்வை முழுவதுமாக சமூகப் பணிகளுக்காக அர்பணித்துக் கொண்டது தான். நாம் யாரும் அவ்வளவு உயரத்திற்குக் கூட செல்ல வேண்டியதில்லை. நம் கண் முன்னே நடக்கும் அன்றாட நிகழ்வுகளில் நம் உதவி தேவைப்படுவோருக்கு நம்மால் இயன்ற அளவு அதனைச் செய்யலாமே!**


மனிதநேயம் என்பது மனிதர் மனிதர் மேல் மட்டுமே கொண்டுள்ள நேயம் என்றால் அந்த வகையில் நாம் இன்று அதிக முன்னேற்றம் அடைந்துவிட்டோம் என்பதே உண்மை. முன்னாட்களில் எல்லாம் தன் உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களுடன் மட்டுமே கொண்டாடி வந்த தங்கள் பிறந்தநாள் விழாக்களை, இன்று நடுத்தர குடும்பத்து மக்கள் கூட ஆதரவற்றோர் விடுதிகளில் உள்ள குழந்தைகளோடு கொண்டாடவே விழைகிறார்கள். ஆனால் மனிதநேயம் என்பது மனிதன் மனிதன் மேல் மட்டும் கொள்ளும் நேயம் என்றல்லாமல் சற்றே விரிந்த பார்வையோடு இயற்கையின் மாபெரும் படைப்பான மனிதன் தன்னைப் படைத்த இயற்கை முதல் தான் படைத்த விஞ்ஞானம் ஈறாக அனைத்தினிடமும் காட்டுவதே ஆகும் என்பதை உணர வேண்டும். இவ்வாறு நோக்குங்கால் மனித நேயத்தை பல கூறுகளாகக் காணலாம். அவற்றுள் இன்றைய சூழ்நிலையைப் பொருத்தமட்டில் முக்கியத்துவம்



வாய்ந்ததாக இருப்பனவற்றை முன்வைபோமேயனால் அவை,

இயற்கையின் பால் மனிதன் கொள்ளும் மனிதநேயம்
அரசு தன் மக்களின் பால் காட்டும் மனிதநேயம்
தனி மனிதன் மற்றொரு மனிதனின் பால் கொள்ளும் நேயம்

மனிதன் என்பவன் இயற்கை தாயின் படைப்புகளின் உச்ச வரம்பு. அவன் இயற்கை தன்னை காப்பதற்காக பெற்ற தலைமகன். பெற்ற தாயிடமே நேயம் பாராட்டாத இன்றைய தலைமுறையினருக்கு இயற்கை தாயைப் பற்றி என்ன கவலை இருக்க முடியும்? விஞ்ஞான வளர்ச்சியால் நாம் வலது கையில் அலைபேசியும் இடது கையில் லேப்டாப்புமாகத் நமக்கு நாமே கலியுக கல்கி



அவதாரமாகத் தோன்றுகிறோம். பாட புத்தகம் எங்கோ மூலையில் கிடக்க மூளையை ஈர்க்கிறது முகபுத்தகம் கதிர்வீசுகளால் ஏற்படும் பாதிப்புகளை அறிந்தும் சொகுசைக் கண்டு பழகிவிட்ட நமக்கு செல் பேசியை கீழே வைக்க மனம் வருவதில்லை. வீட்டுக்கு வீடு றநை-கஜ கனேக்சென். தொழில் போட்டிக்காக நிறுவனங்கள் இலவச சிம் கார்டு கொடுப்பதும் அதிலே காசும் போட்டு கொடுப்பதும், இலவசம் என்றால் இரண்டாக கொடு என்று முந்திச் சென்று வாங்கும் மக்களும், 24 மணி நேரமும் பேசணும் அதுவும் ஒசுலே பேசணும் என்ற அவர்களின் கனவு நிறைவேறிவிட்டதாக நினைக்கும் மக்கள், இது தனக்கு தானே தேடிக்கொள்ளும் அழிவு என்பதை நினைக்கத் தவறியதே வேதனைக்கு உள்ளாக்குகிறது. கதிர்வீசுகளால் ஏற்படும் அபாயங்களை அறிந்தும் நாம் ஏன் தடுக்க முடியாவிடினும் குறைக்க முற்படவில்லை? சரி அவற்றால் ஏற்படும் ஆதாயங்களை அடைகிறோம், எனவே அபாயங்களுக்கும் உள்ளகிறோம். பாவம் உலகில் நம்மோடு பிறந்த நம்மை போன்றே வாழ்வதற்கான அனைத்துஉரிமைகளும் பெற்ற பிற விலங்குகளும் பறவைகளும் மரங்களும் எந்த பாவத்திற்காக இந்த பழிகளை சுமக்க வேண்டும்? இதற்கு இணையான இன்னொரு வளர்ச்சி பிளாஸ்டிக், பொம்மையில் தொடங்கி பை எனும்பேயாகி இன்று அரிசி வரை முன்னேறிவிட்டது. நெஞ்சை நெகிழ வைக்கும் நெகிழியின் வளர்ச்சி. பாதை சீரமைப்பு என்று பரவலாக தார் ரோடும் சிமெண்ட் சாலைகளும் அமைத்து கொண்டோம். அது சரி. எஞ்சிய பகுதியிலும் பிளாஸ்டிக் குப்பையை பரப்பி பூமித் தாயின் தாகம் தணிக்க தவறி அவளை மூர்ச்சை ஆக்கிவிட்டோம். விரைவில் அவள் மூச்சையும் அடக்கி விடுவோம். என்னே நமது அறியாமையின் முன்னேற்றம். அடடா அதிவேகம்! காலகாலமாய் காய்த்து கொண்டிருந்த உயர் பனைமரங்கள் பாவம் எந்த வேண்டுதலுக்காக மொட்டை அடித்துக் கொண்டதோ தெரியவில்லை? எல்லாவற்றிகும் மேலாக நம் பெட்ரோல் டீசல் வாகனங்கள் செய்யும் கொடுமைகள் சொல்லி மாளாது. முடிந்த வரை நடந்து செல்வதும், சிறுது தூரமானால் மிதிவண்டியில் செல்வதும், இயன்ற வரை பொது போக்குவரத்தை பயன்படுத்துவதும் கூட மனிதன் இயற்கையிடம் காட்டும் மாபெரும் நேயம் தான்.

ஒரே இந்தியா தான், வடக்கில் பனி மழை கொட்டுவதும் ஆற்று வெள்ளத்தில் உயிர்கள் மடிவதும், தெற்கில் வறட்சியால் பசியால் நீர் ஆதாரமின்றி உயிர்கள் மடிவதும் ஒரே இந்தியாவில் தான் நிகழ்கிறது. அப்துல் கலாம் அவர்களின் கனவும், ஊ .சு . காமராஜ் (பொறியாளர்) அவர்களின் திட்டமுமான , அதிதிறன் நீர்வழிப் பாதையை உருவாக்குவதன் மூலம் மக்களின், மன்னிக்கவும், உரியினங்களின் வாழ்வாதாரம் காக்கப்படும். ஐயோ குடிபழக்கம் தவறானது என்று, என்றோ ஒரு நாள் வீட்டிற்குத் தெரியாமல் மது அருந்திவிட்டு வாசல் புகுந்தால் அம்மா வசை பாடுவாள் என்றஞ்சி கொள்ளை வழியே உள்ளே புகுந்து வாசம் வெளிவராமல் குப்புறப் படுத்துத் தூங்கிய காலம் போய், வருவாயின் பாதியை, பாதை தெரியாமல் தள்ளாடும் அளவிற்கு போதையை ஏற்றிக் கொண்டு, ஏனப்பா குடித்தாயா என்று அதட்டிக் கேட்டால், அம்மாவை மிரட்டிச் சென்று மல்லாந்து கிடக்கிறான் இருபது வயது நிரம்பாத இளங்குடிமகன். இந்தியாவை உயர்த்துவான் என கனவுகள் காணப்பட்டுள்ள இளம் குடிமகன். தலைமுறை மாற்றம் இப்படி ஒரு தள்ளாட்டத்தையும் நம் முன் வைத்துள்ளது. மாற்றம் அல்ல இது, அவனுக்கு பின்னாளில் கிடைக்கும் ஏமாற்றம். தவறு என்று அஞ்சப்பட்ட ஒரு நிகழ்வு தலைவிரித்து ஆடுகிறது என்றால், தட்டிக் கேட்கும் இடத்தில உள்ள அதிகாரிகளும், அரசும், தம் மக்கள் மேல் காட்ட வேண்டிய மனிதநேயத்தை மறந்து போனதாகத் தானே அர்த்தம். "எரிவதை வெளியே இழுத்தால் கொதிப்பது தானே அடங்கிவிடும்" என்ற நம் ஆன்றோர்களின் பழமொழிக்கிணங்க தயாரிப்பை தடுத்து நிறுத்த வேண்டிய அதிகாரம் பெற்றோர், அதன் அவசியத்தை உணர்ந்தும் அவசரபடாமல் ஏனோ இவ்வளவு காலம் காத்திருகிறார்கள்?! இதற்கு முன் உதாரணமாக டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி தன் மக்கள் மேல் கொண்ட நேயம் தான் விபச்சாரம் விரிவடைந்திருந்த நாட்களிலும் தேவதாசிகள் ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்ற அடிகோலியது.

இந்த உலகம் பல உயிர்களின் தோட்டம். மனித பூக்கள் அதில் ஏராளம். பார்த்து ரசிப்பது ஒரு இனம்.



பறித்து சூடுவது ஒரு இனம். மலரை பார்பதற்கு உரிமம் தேவையில்லை. பறிப்பதற்கு அந்தச் செடியின் சொந்தக் காரராய், அதன் பராமரிப்பாலராய், பாதுகாவலராய் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. இல்லாவிட்டால் அதன் பெயர் திருட்டு என்றாகிறது. மாற்றான் மனைவிக்கு மல்லிகை சூடி தன் மஞ்சத்தில் ஆழ்த்தும் ஆற்றல் படைத்த ஆண்களும், அதுத்த வீட்டு ஆணை அழகன் என்று வியந்து தன் அந்தரங்க அன்பைப் பகிரும் பண்பாடு மறந்த பெண்களும், பலவந்தவமாக பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் சிறு மொட்டுகளும் இதே தோட்டத்தில் தான் உள்ளன. குடும்பம்– ஓர் அழகான அமைப்பு. நம்மோடு முடிவதில்லை உலகம். தலைமுறைகள் தொடரும். அவற்றைப் பசுமையாக தழையச் செய்வது நம் கடமை. நம் குழந்தைகளே நாளைய சமூகம். அவர்களுக்கு நாம் சிறந்த உதாரணமாக இருக்க வேண்டும். மற்றவர் குடும்பத்தை மாசில்லாத மனதோடு பார்ப்பது கூடு மனிதநேயம் தான்.

மனிதநேயத்தை இவ்வாறு பட்டியல் போட்டுக்கொண்டே போனால் பேனாவும் தீர்ந்துவிடும். பேசும் வார்த்தைகளும் முடிந்துவிடும். முடிவில் நம் சமூகம் விடிந்ததா என்பதே கேள்வி. முடியும் என்றெண்ணியதால் தான், விண்ணை முட்டி நிற்கிறது பல துறைகளில் நாம் கண்ட வளர்ச்சி. அதே மனபோக்குடன் ஏன் நம் சொந்த வாழ்விலும் சுத்தமான மனதோடும், மாற்று குறையாத நேயத்தோடும் வாழ முடியாது!

## சட்டங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களுக்கான பொறுப்பு தற்போது நிறைவேற்றப பட்டுள்ளதாகவும், இந்தத் தருணத்தில் இருந்து ஜனாதிபதி என்ற வகையில் மக்களின் பொறுப்பை முழுமையாக ஏற்றுக்கொள்வேன் எனவும், நாங்கள் ஒரே நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளோம் என்பதை தேர்தல் பிரச்சாரத்தின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இனவாத அரசியலுக்கு மீண்டும் எமது நாட்டில் இடமில்லை எனவும், எந்தவொரு மதவாதத்திற்கும் இடம் கிடையாது என்றும் ஜனாதிபதி தனது உரையில் வலியுறுத்தினார். எமது நாட்டில் மீண்டும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இனவாத, மதவாத, கோசங்களை கட்டியெழுப்ப எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என உறுதியளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைவரும் மக்கள் பிரதிநிதிகள் என்றால், நாடாளுமன்றத்தில் கூறப்படும் அனைத்தையும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

வலுவான அரச சேவையின்றி நாடு ஒருபோதும் முன்னோக்கிச் செல்ல முடியாது என தெரிவித்த ஜனாதிபதி, வினைத்திறன் மிக்க அரச சேவை, மக்களின் நலனுக்காகச் செயற்படும் பொதுச் சேவை, இந்த நாட்டில் மீண்டும் நிலைநாட்டப்படும் என நாங்கள் நம்புகின்றோம். அதற்காக அரச ஊழியர்களிடமிருந்தே எமக்கு பலமான ஆணை வழங்கப்பட்டுள்ளதாக நான் கருதுகின்றேன். அதில் கவனம் செலுத்தியுள்ளோம், என்றும் கூறினார்.

ஒவ்வொரு பிரஜையும் அவரவர் மதம், கலாசாரம் மற்றும் மொழியின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்படக் கூடாது என்றும், அரசியல் மாற்றங்கள் இருக்கலாம். சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானது. எனவே, அனைவருக்கும் அச்சம் மற்றும் சந்தேகம் இல்லாத சுதந்திர ஜனநாயக அரசை உருவாக்குவது நமது பொறுப்பாகும். அதை நாங்கள் உருவாக்குவோம் என்பதை உறுதியளிக்கிறோம், எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும்தனது உரையில், "சட்டம்அமுல்படுத்தப்படுவதை மக்கள் உணர வேண்டும். சட்டத்தின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை உடைத்தெறிவதே சமீப காலமாக நாட்டில் நடந்துள்ளது. சட்டம், ஒழுங்கு மீது பொதுமக்களின் நம்பிக்கை தகர்ந்து விட்டது. இதற்குப் பிறகு யாரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. அனைவரும் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சட்டத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவ நம்பிக்கையை நீக்கி, நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் சர்ச்சைக்குரிய குற்றச் செயல்கள் தொடர்பில் மீள விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

நான்உங்களுக்கு உத்தரவாதம்தருகிறேன். சர்ச்சைக்கு வழிவகுத்த குற்றங்கள், அதற்கு காரணமானவர்கள் அம்பலப்படுத்தப்பட்டு, அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும். சட்டத்தையும் நீதியையும் அனுமதிக்கும் ஓர் அரசு நமக்குத் தேவை.

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் ஒப்பந்தம் எதிர்வரும் 23ஆம் திகதி கைச்சாத்திடப்பட எதிர்பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னோக்கிச் செல்லும் பயணத்தில் இது மிகவும் முக்கியமான படியாகும்.

பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய அனுமதிக்காமல் எல்லாப் பக்கங்களிலும் இருந்து சிந்திக்க வேண்டிய ஒரு காலகட்டத்திற்கு நாம் வந்துள்ளோம். இந்தப் பொருளாதாரம் தவறு செய்ய எங்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை. எனவே, ஒவ்வொரு நுட்பமான இடத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். புதிய பொருளாதார மூலோபாயத்தில் பிரவேசிக்க வேண்டும். அது மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவதாக, பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் விரைவான வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் அவசியம். அப்படியானால் அந்தப் பொருளாதாரத்தில் மக்களை ஈடுபடுத்த வேண்டும் என்பதே அதன் அடுத்த பண்பு.

மக்கள் ஒதுக்கப்பட்ட பொருளாதாரத்தால் எங்களுக்கு எந்தப் பலனும் இல்லை. பொருளாதாரத்தின் ஒவ்வொரு செயல்முறையிலும் மக்கள் தங்கள் திறனைப் பொறுத்து பொருளாதாரத்தில் பங்கேற்பாளர்களாக இருக்க வேண்டும்.

மூன்றாவது இயல்பு என்னவென்றால், நாம் எவ்வளவுதான் தேசியச் செல்வத்தை உருவாக்கினாலும், அந்தச் செல்வம் ஒரு சிலரின் கைகளில் குவிந்தால், அது அரசை நிலைப்படுத்தாது. பொருளாதாரப் பலன்கள் நியாயமான முறையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் கொள்கை.

எரிசக்திச் சந்தை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். இது மிகவும் வதானத்துக்குரிய பகுதி. நிதிச் சந்தையும் அத்தகைய முக்கியத்துவத்தைக் கொண்டது. சிதறிய சந்தைகளுக்குப் பதிலாக சீரான சந்தை ஒழுங்குபடுத்தப்படும். கூட்டுறவு வலையமைப்பை மீண்டும் பலப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறோம்.

4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைத்து 8 மில்லியன் டொலர் பொருளாதாரத்தை உருவாக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

5 வருடங்களுக்குள் தகவல் தொழிநுட்பத் துறையுடன் தொடர்புடைய நிபுணர்களின் எண்ணிக்கையை 2 இலட்சமாக உயர்த்துவதும் பிரதான நோக்கமாகும். தகவல் தொழிநுட்பத் துறையின் ஏற்றுமதி வருமானத்தை 5 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க முயற்சிக்கிறோம்.

விவசாயத்துறையை முன்னேற்றுவதற்கான அனைத்து வளங்களும் நம் நாட்டில் இருக்கின்றன. இதன் மூலம், கடனற்ற விவசாயிகளை உருவாக்கி தன்னிறைவுப் பொருாளதாரத்தை வளர்ச்சியடையச் செய்யத் திட்டமிட்டுள்ளாம். கடல் வளத்தில் இருந்து முழுமையான பலனைப் பெறவும் எதிர்பார்த்துள்ளோம்.

கல்வித்துறையில் பாரிய முன்னேற்றத்தை கொண்டு வந்து, டிஜிட்டல் முறைமையை ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

தூய்மையாக்குவது என்பது சூழலையும் நாடாளுமன்றையும் சுத்தப்படுத்துவது மட்டும் கிடையாது. ஊழலற்ற, ஆரோக்கியமான, சுதந்திரமான ஒரு நாட்டை உருவாக்குவதுமாகும்.

மக்கள் வைத்த நம்பிக்கைக்கு ஏற்ப சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச்செல்ல எதிர்பார்த்துள்ளதோடு, அதற்கு மக்கள் தமது ஆதரவை வழங்கவேண்டும்!" எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியலமைப்பில் 33 (அ) உறுப்புரையின்படி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒன்றின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை சபையில் சமர்ப்பிப்பதற்கும் அரசியலமைப்பின் 33 (ஆ) உறுப்புரைக்கு இணங்க நாடாளுமன்றத்தில் வைபவ ரீதியான அமர்வுகளுக்கு தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்படுகிறது.

அந்த வகையில் அரசாங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான விளக்கமான கொள்கைப் பிரகடனத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றியிருந்தார்.



# வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம்




கொழும்பு, நவ. 21

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக நாளை மறுதினமளவில் தாழ் அமுக்கப் பிரதேசம் விருத்தியடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் பின் அடுத்த இரண்டு நாட்களில் அது தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு தாழமுக்கமாக வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதோடு, அத் தொகுதி மேலும் வலுவடைந்து இலங்கையின் கிழக்குக் கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் தொடர்பாக பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு சிரேஸ்ட வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் கூறியுள்ளார்.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# லண்டனில் இருந்து வருகைத்தந்த பெண் வவுனியாவில் கைது

கொழும்பு, நவ. 21

லண்டனில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்து சமூக வலைத்தளம் மூலம் நபர் ஒருவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

லண்டனில் வசித்து வரும் குறித்த பெண், வெளிநாட்டில் இருந்து வவுனியாவிற்கு வருகைத்தந்து தற்போது அங்கு குடியிருக்கும் நபர் ஒருவர் தனது வாகனத்தை தரவில்லை என குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.




இதன் காரணமாக அவர், காரை வைத்திருக்கும் நபருக்கு எதிராக தொடர்ச்சியாக டிக்டொக் சமூக ஊடகத்தில் கருத்துக்களை பதிவிட்டு வந்திருந்தார்.

பெண்ணால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு இருந்தார்.

இந்நிலையில் தேர்தல் முடிந்த பின்னர் அவர், பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி மேலதிக விசாரணைகளை தொடர்ந்து அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



# இந்திய அதானிக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் முறைப்பாடு

கையூட்டல்வழங்க முயன்றதாகவும், அமெரிக்க முதலீட்டாளர்களை ஏமாற்றியதாகவும் இந்திய முன்னணி பணக்காரர் கௌதம் அதானி மீது நியூயோர்க் நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளது

சூரிய சக்தி மின்சார ஒப்பந்தத்தை பெறுவதற்காக, இந்திய அரச அதிகாரிகளுக்கு இலஞ்சம் தர முயற்சித்ததன் மூலம், 2100 கோடி ஷரூபாய் முறைகேட்டில் அவர் ஈடுபட்டதாக, இந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023ம் ஆண்டில் இது தொடர்பாக அமெரிக்க எப்பிஐ நிறுவனம்,அதானியின் உறவினரான சாகர் அதானியின் நியூயோர்க் வீட்டில் சோதனையை நடத்தியிருந்தது.



இந்தநிலையில் நீதிமன்ற முறைப்பாட்டில் அதானி மற்றும் அவரது உறவினர் சாகர் அதானி உட்பட 7பேரின்பெயர்கள்உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆசியாவில் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான அதானி,அமெரிக்கா முதலீட்டாளர்களை ஏமாற்றிவிட்டதாகவும்,அவர்களிடம்உண்மைகளை மறைத்துவிட்டதாகவும் இந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது இந்தியாவில் அவரின் (Adani Green Energy Ltd) 12 கிகாவோட் மின்சாரம் தயாரிப்பதற்கான சூரிய ஒளி திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இதற்காக பல கோடிகளை அவரின் நிறுவனம் கையூட்டலாக இந்திய அதிகாரிகளுக்கு கொடுத்துள்ளது.



இந்தநிலையில், குறித்த திட்டத்தில் பல மில்லியன் டொலர்களை முதலீடு செய்த அமெரிக்க நிறுவனங்களிடம் உண்மையை மறைப்பதற்காக, 265 மில்லியன் டொலர்களை அதானி குழுமம் கையூட்டலாக கொடுக்க முயன்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த முறைப்பாட்டின்படி, கௌதம் அதானிக்கு நியூயோர்க் நீதிமன்றம் பிடிவிறாந்தை பிறப்பித்துள்ளது

ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, அதானி உலகின் 19வது பணக்காரர் ஆவார், இதன் மொத்த சொத்து மதிப்பு சுமார் 85.5 பில்லியன் டொலர்களாகும்.

இதற்கிடையில் கடந்த ஆண்டு, அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிதி ஆராய்ச்சி நிறுவனமான ஹின்ட்பேர்க், அதானி மற்றும் அவரது நிறுவனம், கணக்கியல் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# மன்னார் வைத்தியசாலையில் இறந்த இளம் தாய் வாக்குறுதியின் பின் கைவிடப்பட்ட போராட்டம்

மன்னார் , நவ. 21

மன்னார் பொது வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணம் அடைந்த தாய் மற்றும் சிசுவின் மரணத்திற்கு நீதி கோரி மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று மாலை 4.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இரவு 8 மணியளவில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

எனினும் இரு அரசியல் கட்சிகளின் முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளர்கள் இருவர் மக்களின் போராட்டத்தை தமது அரசியல் நாட கமாக வழிநடத்திச் சென்ற நிலையில் அங்கு சலசலப்பு ஏற்பட்டது.





தாயின் மரணத்திற்கு நீதி வழங்க வேண்டும் தவறு செய்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும், வைத்தியசாலை நிர்வாகம் மாற்றப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தின் போது பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்குள் போராட்டகாரர்கள் நுழைய முற்பட்ட நிலையில் கலவரம் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் கலகம் அடக்கும் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் இறந்த பெண்ணின் பெற்றோரிடம் கலந்துரையாடிய போதும் சுமூகமான நிலை ஏற்படவில்லை.

போராடடகாரர்கள் தொடர்ந்தும் கொட்டும் மழையில் மன்னார் பொது வைத்தியசாலை முன் வீதியையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசேட குழு பிரதிநிதிகள் அடங்கலாக உயிரிழந்த பெண்ணின் தாய் மற்றும் உறவினர்கள், சட்டத்தரணிகள்,மத தலைவர்களை உள்ளடக்கி விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக இடம்பெற்றது. கலந்துரையாடலின் போது குறித்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது முதல் அவர் உயிரிழக்கும் வரை அங்கு நிகழ்ந்த சம்பவங்கள், உயிரிழந்த பெண்ணின் தாயாரால் குழுவினரிடம் முன்வைக்கப்பட்டது.

மேலும் இம்மரணங்களுக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன் வைத்தார்.இதன் போது உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுத்து மூலம் தமது கோரிக்கையை சமர்ப்பிக்குமாறு குறித்த குழுவிடம் கோரிக்கை வைத்தனர்.

இந்த நிலையில் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலும்,மாகாண பணிப்பாளர் தனது விசாரணை குழுவை நியமித்து மூன்று நாட்களில் தமது விசாரணையை முடிப்பதாகவும் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இந்த விடயங்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் உள்ளடங்கலாக அனைவருக்கும் உரிய நடவடிக்கை எடுப்பதாக மாகாண பணிப்பாளர் எழுத்து மூலம் உத்தரவாதம் வழங்கினார்.

இந்த நிலையில் குறித்த உத்தரவாதத்தை ஏற்றுக் கொண்டு உயிரிழந்த பெண்ணின் தாய் மற்றும் உறவினர்கள் அங்கிருந்து சென்றனர். எனினும் இரண்டு அரசியல் கட்சிகளின் முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளர்கள் குறித்த உத்தரவாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் மக்களை திசை திருப்பி தமது அரசியல் நாடகத்தை அரங்கேற்றினர்.

இதனால் அங்கு மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.இந்த நிலையில் பொலிஸார், விசேட அதிரடிப்படை மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் இணைந்து வைத்தியசாலைக்கு முன் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பலவந்தமாக வெளியேற்றினர்.

இதனால் சில மணி நேரம் மன்னார் வைத்தியசாலை பிரதான வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஜ)

